**OS.No.202/2019 P.W.1-பிரபாகரன் 01.09.2025**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.சா.ஆ.2ல் 4 பிளாட்டுகளின் விலை அதிகமாக இருந்தால் பிரதிவாதி அதை கொடுப்பார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2-ல் கண்ட கூடுவாஞ்சேரியில் கெஜெலட்சுமி நகரில் ஒரு பிளாட்டும், ராஜகீழ்ப்பாக்கத்தில் ஒரு பிளாட்டும், மாடம்பாக்கத்தில் ஒரு பிளாட்டும், கூடுவாஞ்சேரி டிபென்ஸ் காலனியில் ஒரு பிளாட்டும் நான் கொடுத்தேன். வா.சா.ஆ.2-ல் கண்ட அரவிந்தன் நகர் பிளாட் நான் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.10-ல ் ரூ37,91,600/- பெற்றுக்கொண்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.11-ல் ரூ.9,00,000/- பெறப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5-ல் ரூ.21,64,000/- பெற்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன தொகைகள் அனைத்தும் நான் பெற்ற கடனுக்கு திரும்ப செலுத்திய தொகைகளாகும். அதை நான் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்களில் நான் தொகை பெற்றுக்கொண்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவைகள் நான் பெற்ற கடனை திரும்ப செலுத்திய தொகைகளாகும். அதை நான் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிடவில்லை. எந்த வேலையும் பாக்கி இல்லை என்றால் தொகை சரிசெய்யப்படும் என்று வா.சா.ஆ.2-ல் வாசகம் உள்ளது என்றால் எந்த வேலையும் பாக்கி இல்லை, பிரதிவாதிக்கு சுவாதீனம் கொடுக்கப்பட்டு அதற்கு ரசீது வாங்கப்பட்டது.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)